மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த வகையான பாதுகாப்பு அவர்களுக்குத் தரப்படவேண்டும் என்று விவரக் குறிப்பு இல்லை. அவற்றைத் தந்தால் அதுபற்றிப் பரிசீலிக்கலாம். இப்போது சாதாரணமாக ஆங்காங்கே உள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக உரிமம் மற்றவைகளை வழங்குவதை அரசு மேற்கொண்டிருக்கின்றது. ஆனால் சில இடங்களிலே மீனவர்கள் அல்லாதவர்கள் அப்படிப்பட்ட சங்கங்களில் இடம் பெற்றிருக்கிறார்கள். எனவே இப்போது மீனவர்கள் மட்டும்தான் கூட்டுறவுச் சங்கங்களில் ஈடுபடவேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம். எனவே மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரிமம் மற்றவைகளை வழங்க வேண்டும், அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. தகவல் கோரல்

(அ) அதிகாரிகள் மாடம் காலியாக இருத்தல்

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், கடந்த இரண்டு தினங்களாகவே இங்கே முக்கியமாக ஆளுநர் உரையின்மீது பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிப்பேசி பல்வேறு கேள்விகள் கேட்கின்றபோது அதிகாரிகள் இருக்கக் கூடிய இடத்திலே ஒரு அதிகாரி கூட வருவதில்லை என்ற நிலைமை இருக்கின்றது. நேற்று கூட மாலைப் பொழுதில்தான் அதிகாரிகள் வந்தார்கள். இன்றும் ஒரு அதிகாரிகூட வரவில்லை. அதற்கு என்ன காரணம்? அதிகாரிகள் ஸ்ட்ரைக் செய்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிகாரிகள் வருவதும், வராததும் அரசினுடைய பொறுப்பு. இப்போது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். எனவே இனிமேல் வருவார்கள் என்று நினைக்கிறேன்.

1. வினாக்கள்— விடைகள்—தொடர்ச்சி

உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி.

காரங்காட்டில் இறால் வளர்ப்புப் பண்ணை அமைக்கும் திட்டம்

வினா எண் 102—திரு. ச. அங்குசாமி மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவாடானை தொகுதி காரங்காட்டில் இறால் வளர்ப்புப் பண்ணை தொடங்குவது குறித்து செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: திருவாடானை தொகுதி காரங்காட்டில் மாதிரி இறால் வளர்ப்புப் பண்ணை ஒன்று அமைக்கும் திட்டம் ஏற்கெனவே அரசால் அங்கீகரிக்கப் பட்டு 19-4-82 அன்று பண்ணை கட்டுமானப்பணி துவக்கப் பட்டுள்ளது.

திரு. ச. அங்குசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும்? அது செயல்படக்கூடிய நிலைமை எந்த அளவில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டம் ரூபாய் 75 ஆயிரம் மதிப்பு செலவில் ஆரம்பிக்கப்பட்டு அந்த திட்டம் துவங்கப்பட்டு ஒரு பகுதி வேலை நடைபெற்று முடிந்திருக்கிறது. மற்றப்பகுதி வேலைகள் நடைபெறவேண்டும். அதில் கிட்டத் தட்ட 50, 60 சதவீதம் வேலைகள் முடிவுற்று இருக்கின்றன. இன்னும் 40 சதவீத வேலைகள் முடிவுறும் தருவாயில் இருக் கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, காரங்காட்டில் இறால் வளர்ப்புப் பண்ணை தொடங்கப்பட்டு 60 சதவீத வேலைகள் முடிவுற்றிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நன்றி. இப்படிப்பட்ட பண்ணைகளை பல இடங்களில் தொடங்கவேண்டிய சூழ்நிலையில் அரசாங்கம் இருக்கிறது என்பது தெரிகிறது. ஏன் என்றால் பழவேற்காடு என்ற இடத்தில் டாட்டா ஒரு பெரிய பண்ணையை அமைத்து அதில் இறால் முட்டைகளை அப்படி அப்படியே எடுத்து வளர்க்கக்கூடிய காரணத்தால் மீனவர்களுக்கு இதன் மூலம் வருவாய் குறைகிறது. இந்த திட்டத்தை மீனவர்களே சங்கமாக தொடங்கி இது போன்ற பண்ணைகளை நடத்துவதற்கு அரசு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதிரி இறால் வளர்ச்சிப் பண்ணை அமைத்து விஞ்ஞான அடிப்படையில் நூதனமான முறையில் இறால் வளர்ச்சிப் பண்ணைகளை மேற்கொள்ளும் முறைகளை மீனவர்களுக்கு அறிமுகப்படுத்தும் திட்டம் ஒன்றுக்கு 1980-81ம் ஆண்டில் ஒப்புதல் அளித்து அந்தத் திட்டத்தின்படி 10 இடங்களில் அந்த திட்டம் அமைக்கப்பட்டன. அவை (1) பழவேற்காடு, (2) வாணியம்சாவடி, (3) பரங்கிப்பேட்டை, (4) தொண்டியக்காடு, (5) ஏரிக்குளக்கரை, (6) கட்டுமாவடி, (7) கண்ணைமுனை, (8) கிழவைப்பார், (9) புன்னக்காயில், (10) காரங்காடு என்கிற அந்த 10 இடங்கள் அதில் பழவேற் காடும் இணைந்து உள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இறால் வளர்க்கக்கூடிய பண்ணைகள் இன்னும எந்த எந்த இடத்தில் அமைப்பதற்கு அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு அரசுக்கு இறால் வளர்ப்பு மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாகடர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறால் வளர்ப்புக்காக உகந்தது உவர் நீர் பகுதிகள் ஆகும். நான் முதலில் குறிப்பிட்ட 10 இடங்களில் இந்த 'மாதிரி பண்ணைகள்' அமைக்கப்பட்டு அதனுடைய வெற்றியைப் பொறுத்து மேலும் உவர் நீர் பகுதிகளில் இப்படிப்பட்ட பண்ணைகளை அமைப்பதன் மூலம் ஊக்குவிக்க முடியுமா என்பதையும் அரசு பரிசீலித்துக்கொண்டு வருகிறது. எவ்வளவு இறால் விற்பனை ஆகியது என்ற விவர குறிப்புகள் இல்லை. தனி கேள்வி போட்டால் விவர குறிப்புகள் தரலாம்.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரங்காடு பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் இறால் பண்ணை அமைக்க பொருத்தமாக இருக்கிறது. அந்த இடத்தில் தனியார் பண்ணை ஆரம்பிக்க அரசு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதிரிப் பண்ணையை தொடர்ந்து கூடுமானவரையில் கூட்டுறவு பண்ணைக்கு ஊக்கம் தரவேண்டும் என்ற எண்ணத்தில் இதை மேற்கொண்டிருக்கிறோம். எனவே அப்படிப்பட்ட கூட்டுறவு முறையில் யாரும் முன்வராத நிலை இருக்குமானால் அதற்கு பங்கு வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற யோசனைகளை நாம் ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் தாலுகாவை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்

*வினா எண் 03 திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தாலுகாவை இரண்டாகப் பிரிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

(இ) எந்தெந்த கிராமங்கள் எந்தத் தாலுகாவில் இருக்கும்?

மாண்புமிகு திரு எஸ் டி. சோமசுந்தரம்: (அ), (ஆ) மற்றும் இ):அரசின் பரிசீலனையில் உள்ளது.